**மோட்டார் வாகன விபத்துக்கள் இழப்பீட்டுத் தீர்ப்பாயம்,**
**சார்பு நீதிமன்றம், வள்ளியூர்**
**மோ.வா.வி.கோ.மனு எண். 210 /2018**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | – | சுஜாதா மதன் | ம.சா.1 |
| த/பெ | – | | |
| கிராமம் | – | | |
| தாலுகா | – | | |
| தொழில் | – | | |
| ஜாதி | – | | |
| மதம் | – | | |
| வயது | – | | |

1873ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டத்தின் பிரகாரம் 2022ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 26–ம் நாள் மேற்படியாரிடமிருந்து சத்தியத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**முதல் விசாரணை : –**

நான் இந்த மனுவில் மனுதாரர். எனது சாட்சியத்தை நிரூபண உறுதி கூற்றாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் எனது அறிவுரையின் பேரில் அது தயார் செய்யப்பட்டது.

1. பணகுடி காவல் நிலைய குற்ற எண். 344/2018 முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.1.**
2. பார்வை மகஜர் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.2**
3. மாதிரி வரைபடம் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.3.**
4. TN 72 BZ 1083 என்ற இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.4.**
5. TN 72 BY 3954 என்ற இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.5**
6. குற்ற அறிக்கை சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.6**
7. குற்ற வழக்கில் அபராதம் செலுத்த பிறப்பித்த உத்தரவு **ம.சா.ஆ.7**
8. காயச்சான்று **ம.சா.ஆ.8**

9. நாகர்கோவில் மனுவேல் எலும்பு முறிவு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்ட வகையில் ஏற்பட்ட செலவினங்களுக்கான ரசீது ரூ.1,93,925/–க்குரியது **ம.சா.ஆ.9.** (ஆவணத்தின் நம்பகத்தன்மை மற்றும் உண்மைத்தன்மையை நிரூபிக்கும் பொருட்டு ஆவணம் ஏற்றுக்கொள்ளக்கூடிது என ஆட்சேபிக்கப்பட்டு ஆவணம் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)

10. நாகர்கோவில் மனுவேல் எலும்பு முறிவு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்ட வகையில் ஏற்பட்ட செலவினங்களுக்கான ரசீது ரூ.59,776/–க்குரியது **ம.சா.ஆ.10.** (ஆவணத்தின் நம்பகத்தன்மை மற்றும் உண்மைத்தன்மையை நிரூபிக்கும் பொருட்டு ஆவணம் ஏற்றுக்கொள்ளக்கூடிது என ஆட்சேபிக்கப்பட்டு ஆவணம் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)

11. நாகர்கோவில் மனுவேல் எலும்பு முறிவு மருத்துவமனை வழங்கிய விடுவிப்பு சான்று **ம.சா.ஆ.11.**

12. ஸ்கேன் ரிப்போர்ட் **ம.சா.ஆ.12**

13. என்னுடயை நாட்டிய படிப்பு சான்றிதழ் 3 எண்ணம் **ம.சா.ஆ.13**

14. எனது ஓட்டுநர் உரிமம் அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்ட நகல் **ம.சா.ஆ.14**

15. எனது ஆதார் அட்டை அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்ட நகல் **ம.சா.ஆ.15**

16. எனது வங்கி சேமிப்பு கணக்கு புத்தகத்தின் முதல் பக்கம் அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்ட நகல் **ம.சா.ஆ.16.**

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>2 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>**

நாட்டிய பயிற்சி பள்ளி நடத்தி வருமானம் ஈட்டுவதாக ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தற்போது நடன பயிற்சி கொடுக்கமுடியவில்லை டியூசன் எடுத்து வருகிறேன். பிஎஸ்சி பிஎட் படித்துள்ளேன் டியூசன் எடுத்து மாதம் ரூ.7,000/– சம்பாதிக்கிறேன் நீதிமன்றதிற்கு சாட்சியம் அளிக்க தன்னிச்சையாக வந்துள்ளேன் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் இருசக்கர வாகனத்தில் சென்றேன். எனக்கு ஓடடுநர் உரிமம் உள்ளது. நான் ஓட்டி சென்ற வண்டி என் கணவர் பெயரில் உள்ளது. அந்த வாகனத்திற்கு காப்பீடு உள்ளது. என் கணவர்

பெயரையும் வண்டியின் காப்பீட்டாளரையும் தரப்பினராக சேர்க்கவில்லை என்றும் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த விபத்து 06.06.2018 ம் தேதி நடந்தது. மனுவேல் மருத்துவமனையில் முதலில் ஒரு நாள் சிகிச்சைக்கு சேர்ந்தேன் 15 நாள் கழித்து ஆபரேசன் செய்யவேண்டும் என்று சொன்னார்கள் மறுபடியும் 22 ம் தேதி அட்மிட் ஆனேன் ஆபரேசன் செய்தார்கள். 29 ம் தேதி வரை உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வந்தேன். மனுவேல் ஆசுபத்திரிக்கு முதலில் சிகிச்சைக்கு போன போது விபத்து எப்படி என்று சொன்னேன். ஆசுபத்திரிக்கு போலீசார் வந்து விசாரித்தார்கள். நான் நடந்ததை சொன்னேன். எழுதி கையொப்பம் பெற்று கொண்டார்கள். விபத்து சம்பந்தமாக போலீசார் எந்த தேதியில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்கள் என்று ஞாபகமில்லை. 30.06.2018 ம் தேதி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். முதலில் ஆசுபத்திரியில் வந்து பார்த்து போலீசார் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாக சொன்னார்கள். முதல் தகவல் அறிக்கையில் என் மீது மோதிய நபரின் பெயர் , விலாசம் தெரியாததால் முதலில் புகார் கொடுக்கவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 24 நாள் காலதாமதாக புகார் கொடுத்ததற்கு என்ன காரணம் என்று சொல்லவில்லை என்றால் முதலில் விபத்து பெரிய பாதிப்பு ஏற்படவில்லை என்று நினைத்தேன் ஆபரேசன் செய்ய வேண்டும் எனறு சொன்ன பிறகு தான் புகார் கொடுத்தேன். விபத்து ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டி நபர் காவல்கிணறு பகுதியை சேர்ந்தவர் எனக்கு வடக்கன் குளம் இரண்டு பகுதியும் அருகருகே உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் வாகனத்தின் உரிமையாளர் தோன்றாத்தரப்பினர் என்றால் சரிதான். விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் உரிமையாளரும் நானும் ஒரே பகுதியை சேர்ந்தவர்கள் என்பதால் என் மீது மோதிய வாகனத்தின் உரிமையாளர் யார் என்று தெரியாததால் எனக்கு இழப்பீடு கிடைக்க வேண்டும் என்பதற்காக நானும் 1 ம் எதிர்மனுதாரரும்சேர்ந்து பின்யோசனை செய்து தாமதாக புகார் கொடுத்தோம் என்றால் சரியல்ல. விபத்து நடந்த ரோடு நான்கு சந்திப்பு ரோடு என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த ம.சா.ஆ.9 ஆவணத்தில் உரிய முத்திரை வில்லை ஒட்டப்படாததால் ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றா'ல சரியல்ல. ம.சா.ஆ 9 மற்றும் 10 வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றால்

சரியல்ல. சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரித்தால் மட்டுமே ம.சா.ஆ 9 மற்றும் 10 ன் நம்பகத்தன்மையை நிரூபிக்க முடியும் என்றால் சரியல்ல. விபத்தினால் ஏற்பட்ட காயத்தின் தன்மை மற்றும் பாதிப்பு ஆகியவற்றை அறிய திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மருத்துவக்குழு முன்பு ஆஜராகி அறிக்கை தா்கைல் செய்தால் மட்டுமே விபத்தில் ஏற்பட்ட காயத்தின் தன்மையை அறிய முடியும் என்றால் சரியல்ல. நான் கேட்ட நஷ்ட ஈடு அதிகம் என்றால் சரியலல. குற்ற அறிக்கை தாக்கல் செய்த புலன் விசாரணை அதிகாரியை விசாரணை செய்தால் மட்டுமே குற்ற வழக்கின் உண்மை தன்மையை நிரூபிக்க முடியும் என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளில் நான் கோரிய இழப்பீடு அதிகம் என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை –</u>** இல்லை